# பொதுக்காலம் 30 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம் 22: 21-27,

பதிலுரைப்பாடல். திபா. 18: 1- 3, 46-50,

திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய

முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 5C-10,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 22: 34-40

## திருப்பலி முன்னுரை:

**என் கற்பாறையாம் ஆண்டவர் போற்றப் பெறுவராக!**

**என் மீட்பராம் கடவுள் மாட்சியுறுவராக!.**

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர, சகோதரிகளே! நமக்கு மீட்பளிக்கும் வல்லமையும், அரணும், கற்பாறையும், கோட்டையுமான நம் இறைத் தந்தையின் திருநாமத்தில் நல் வாழ்த்துக்கள் கூறி உங்கள் அனைவரையும் அன்புடன் இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வரவேற்று நிற்கின்றோம். இன்று நாம் ஆண்டின் பெதுக்காலம் முப்பதாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

நம் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் நம் ஆண்டவராகிய கடவுளிடம் அன்புசெலுத்துவதும். நம்மீது நாம் அன்பு கூர்வதுபோல நமக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வதும்' திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் அடிப்படையாக அமைகின்றன, என்னும் வாழ்விற்கான உயர் நெறிமுறையினை மீளவும் இறை வார்த்தைகள் வழியாக இறைவன் நமக்கு நினைவுபடுத்துகின்றார். இந்த உயர் நெறிமுறையினைக் கருத்தோடும், பொறுப்புணர்வோடும் நாம் ஏற்றுக்கொண்டு அதனை நம் இதயத்தில் பதித்தவர்களாய், அன்பு, இரக்கம், நற்பண்புகள் ஆகியவற்றோடு வாழவும், வளரவும் நம்மை நேர்மையான உள்ளத்தோடு அர்ப்பணித்தவர்களாய் இத் திருப்பலியில் பங்கேற்றுச் செபிப்போம்.

www.tamilcatholicnews.com

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1.உமது பேரன்பால் உலகை நிறைத்துள்ள எம் இறைவா!**

எம் திருஅவையிலுள்ள அனைவரும் இறையச்சம், அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல் ஆகிய பண்புகளை தங்கள் பணிவாழ்வில் உள்ளடக்கி இறையன்பிலும், பிறரன்பிலும் சிறந்து விளங்கிட தூய ஆவியாரின் கொடைகளைப் பொழிந்திடவும், இயேசுவின் உடனிருப்பை மனதில் கொண்டு இறைபணிகளைச் செய்திட உமதருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**2. எங்கள் வாழ்நாளை எல்லாம் நலன்களால் நிறைவு செய்கின்ற எம் இறைவா!**

எம் குடும்பங்களில் இறையன்பும், பிறரன்பும் நிறைந்திடவும், அவரவருக்கு உரியது அவரவருக்குக் கொடுப்பதால் இல்லங்களிலும், மனங்களிலும் அன்பும் அமைதியையும் நிறைவாய் பெற்றிடவும் உமதருள் வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**3. ஒடுக்கப்படுவோருக்கு அடைக்கலமாகிய எம் இறைவா!**

அவரவருக்கு உரியது அவரவருக்குக் கொடுக்கப்பட்டால் இந்த மண்ணகம் விண்ணகமாக மாறிவிடும் என்பது உறுதி. இதனை உணர்ந்து எம் இளையோர்கள் இனிவரும் காலங்களில் தங்களின் வாழும் வாழ்க்கை முறையினைச் சிறப்புடன் மாறி அமைத்திட தேவையான வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. என் ஆற்றலாகிய தந்தையே இறைவா!**

உமது பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும், எம் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் எம் ஆண்டவராகிய உம்மையும், எம் அயலவரையும் அன்பு செய்யவும், அன்பு, இரக்கம், நற்பண்புகள் ஆகியவற்றோடு வாழவும், வளரவும் வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. உண்மையாகவே வாழ்கின்ற தந்தையே இறைவா!**

உலகத்து மக்கள் அனைவரும், உமது உயிருள்ள பிரசன்னத்தை உமது இறைவார்த்தையிலும், நற்கருணையிலும், திருவருட்சாதனங்களிலும் கண்டுணர்ந்து சமத்துவ மனநிலையோடும், பொது நலத்தோடும் வாழுவதற்கு வேண்டிய ஆற்றலை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**6. அன்பின் நாயகனே! எம் இறைவா!**

மன்னிப்பதால் மன்னிப்பைப் பெறுகிறோம், அன்புச் செய்வதால் அன்பு செய்யப்படுகிறோம் என்பதனை உணர்ந்து எம் அடுத்திருபவர்களை மன்னிப்பதிலும், நட்புப் பாராட்டுவதிலும் அசிசியாரைப்போல் அன்பின் சாட்சிகளாய் இவ்வுலகில் வாழ்ந்து நிலைவாழ்வைப் பெற்று கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.